0345

# நித்திய தமிழ் அர்ச்சனைத்திரட்டு



தொகுப்பு:-
ஆறுமுகம் கந்தையா J.P.

விநாயகர், சிவன், சக்தி, முருகன், திருமால்
நவக்கிரகங்கள்
ஆகியனவற்றுக்குரியவை

SNT

பதிப்பாளர்:-
சிவா பிறின்டேர்ஸ்,
41, மெயின் வீதி, கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/ 20403

உ

சிவமயம்

# தெய்வத் துதிகளின் முக்கியத்துவம்

உலகில் காசு, பணம், சொத்து, சுகம், பட்டம், பதவி எது இருந்தாலும் ஏனோ மனதுக்கு நிம்மதி ஏற்படுவதில்லை. மனிதன் அமைதியைத்தேடி ஓடினாலும் அது எங்குளது? என்ற ஐயம் - எப்படிக் கிட்டும் என்ற ஏக்கம் - இவற்றில் தான் வாழ்க்கை நடந்து கொண்டிருக்கின்றது. இந்த உலகியற் பொருட்கள், ஆன்ம அமைதி இவற்றைச் சீர் தூக்கிக் கணித்த நம் முன்னோர்கள் தியானவழியால்தான் மன நிம்மதி - நிறைவு பெறமுடியும்; அமைதி - நிம்மதி எல்லாம் வெளிப்பொருட்களில் இல்லை. உள்ளத்தின் உள்ளேதான் ஒளிந்து கொண்டுளது என்ற முடிவுக்கு வந்தனர்.

இந்தக் காலச் சக்கரச் சுழற்சியில் - சுழலில் இயந்திரயுகத்தில் அன்றாட உடற்பிரச்சனைகளுக்கே கவனம் செலுத்த வழியின்றி அல்லற்படுகிறோம். திக்குமுக்காடுகிறோம்; திணறுகிறோம். இந்நிலையில் எளிதாக இனிதாக மன அமைதி பெறுதற்கு; இந்த இறைபற்றிய துதிகளே ஏற்ற - உற்ற - உரிய சாதனங்களாகும் எனலாம். எனவே ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வழக்கமாக நம்மை வாழவைக்கும் தெய்வத்தைத் துதிசெய்யும் பழக்கத்தை மேற்கொண்டால்; படிப்படியாக மன அமைதி மேவும் என்பதில் எத்துணையும் ஐயம் இல்லை.

நித்தமும் நித்தியத்துவமும் வாய்ந்த இத்தெய்வத் துதிகள் பல நூல்களில் படித்து தொகுத்து இப்போது ஒன்றாக உருவாக்கி உங்கள்முன் உலவவிடுகிறோம். உங்கள் கையில் தவழச் செய்துள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் வைத்து மனதில் மதித்து வாயால் துதித்து போற்ற வேண்டிய புதையல் இப்பனுவல் எனலாம். இப்பாராயணப் பொக்கிஷத்தை நாளும் பாராயணம் செய்து சிறப்பதே ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கிய தன்நலம் மறந்து நம்நலன் கருதி நமக்காக இவ் வருட் செல்வங்களை நல்கிய மெய்யன்பர்களுக்கு நாம் காட்டும் நன்றி - செய்யும் சிறப்பு ஆகும்.

இத்துதிகளைத் துதித்து எல்லோரும் எல்லா நலமும் பெற இறையருள் இறைஞ்சுகின்றேன்; சிவன் திருவருள் பரவுகின்றேன்.

தொகுப்பாளர்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| விநாயகக்கடவுள் அர்ச்சனை | — | 01 |
| சிவன் அர்ச்சனை | — | 05 |
| சிவசக்தி அர்ச்சனை | — | 08 |
| முருகன் அர்ச்சனை | — | 12 |
| திருமால் அர்ச்சனை | — | 16 |
| நவக்கிரக அர்ச்சனை | — | 20 |
| நவக்கிரக புகழ்ப்பாக்கள் | — | 24 |


[விலை 4-90

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவ சிவ

# தமிழ் அருச்சனை மலர்

## விநாயகக் கடவுள்

ஓம்
திருச்சிற்றம்பலம்

வேழ முகத்து விநாயகா போற்றி
மலைமகள் பெற்ற வாரணு போற்றி
ஐங்கர நால்வாய் அமலா போற்றி
புழைக்கை கொண்ட புனிதா போற்றி
மோதகம் ஏந்திய முதல்வா போற்றி

நான்ற வாயுடை நாதா போற்றி
மூலா தார முன்னவா போற்றி
துண்டிரா சன்மகின் துங்கா போற்றி
ஐந்தொழில் ஆற்றும் ஐங்கரா போற்றி
வெள்ளை மேனி விநாயகா போற்றி

அறுமுகச் செவ்வேட் கண்ணு போற்றி
ஐந்து வான்முகத் தையா போற்றி
வெட்சி புனைந்த விநாயகா போற்றி
கன்ன மதத்துக் கரிமுகா போற்றி
வல்லபைக் குசிய வாரணு போற்றி

கருணை மதம்பொழி கணேசா போற்றி
பொன்னா மேனிப் போதகா போற்றி
பால சந்திரப் பரமா போற்றி
அல்லல் களையும் ஐங்கரா போற்றி
கரும்பு மிசையும் கரிமுகா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிகுணம் கடந்த குஞ்சரா போற்றி
முக்கட் களிற்று முன்னவா போற்றி
சிறுகண் களிற்றுச் செல்வா போற்றி
வெள்ளைக் கொம்புடை விநாயகா போற்றி
கணங்கள் போற்றும் கரிமுகா போற்றி

பூதக் காலுடைப் புனிதா போற்றி
முக்கனி நுகரும் முதல்வா போற்றி
சதுர்த்தி நன்னாட் சதுரா போற்றி
வெள்ளை மதம்பொழி விநாயகா போற்றி
புகர்முகக் களிற்றுப் புங்கவா போற்றி

மகோற்கடன் என்ற மாண்பா போற்றி
கரகநீர் கவிழ்த்த கரிமுகா போற்றி
வலம்புரிப் பெயருடை வாரணா போற்றி
வெள்ளுடை விரும்பும் விநாயகா போற்றி
சிங்கம் ஊர்ந்த செல்வா போற்றி

வள்ளியை வெருட்டிய வாரணா போற்றி
விக்கினம் போக்கும் விநாயகா போற்றி
ஒற்றைக் கொம்புடை ஒருவா போற்றி
விகட சக்கர விநாயகா போற்றி
புராரி போற்றும் புதல்வா போற்றி

அகத்தியர்க்கருளும் அன்பா போற்றி
மழவிளங் களிற்று மன்னா போற்றி
மஞ்சள் நிறத்து வாரணா போற்றி
சித்தி புத்தியைச் சேர்ந்தவா போற்றி
தேரச் சொடித்த தேவா போற்றி

உதரபந் தமுடைய ஒருவா போற்றி
நாரதர் போற்றும் நாயகா போற்றி
ஐவகைப் பூதமாய் அமைந்தவா போற்றி
வழிபடு வார்க்கருள் வாரணா போற்றி
அவல்பொரி விரும்பும் ஐயா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிக்கு அருளிய மகிபா போற்றி
வேண்டுவார்க் கருளும் விநாயகா போற்றி
மூவா சாவா முன்னவா போற்றி
சிந்தா மணிநற் செல்வா போற்றி
நாகா பரணவி நாயகா போற்றி

வாதா பிவாரண வள்ளலே போற்றி
மும்முக வாரண மூர்த்தியே போற்றி
கட்டறு களிற்றுக் கன்றே போற்றி
குமார கணபதிக் கோவே போற்றி
மாலுக் கருளிய மணியே போற்றி

தசக்கரங் கொண்ட தந்தியே போற்றி
கந்தன் களிக்கும் களிறே போற்றி
பெருச்சா ளியூரும் பிரானே போற்றி
ஒடிந்த கொம்புடை உம்பலே போற்றி
களிற்று மாமுகக் கடவுளே போற்றி

மயில்மி தூர்ந்த வாரண போற்றி
இந்துவின் பிறையணி யானையே போற்றி
வெண்பொடி பூசிய வேழமே போற்றி
கருணை பூக்கும் களிறே போற்றி
கற்பக வேழக் கன்றே போற்றி

சித்தி விநாயகச் செம்மலே போற்றி
தழைசெவி இரண்டுடைத் தந்தியே போற்றி
மழைமதக் களிற்று மணியே போற்றி
ஓமெனும் முகத்து ஒருத்தனே போற்றி
வெண்ணூல் அணிந்த வேழமே போற்றி

செந்நிற மேனிச் செம்மலே போற்றி
கதிரொளி வீசும் களிறே போற்றி
தம்பிக் கருள்புரி தந்தியே போற்றி
உமையருள் பெற்ற உம்பலே போற்றி
எண்குண முடைய இபமே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடை அணிந்த ஓங்கலே போற்றி
துரியங் கடந்த தும்பியே போற்றி
மகாகண பதிஎனும் மணியே போற்றி
கார்முகக் குஞ்சரக் கன்றே போற்றி
உம்பர் போற்றும் உம்பலே போற்றி

பேழை வயிற்றுப் பிள்ளாய் போற்றி
தொந்தி வயிற்றுத் தும்பியே போற்றி
இளம்பிறை போன்ற எயிற்றாய் போற்றி
கயமுகத் தசுரனைக் காய்ந்தாய் போற்றி
அங்குச பாசம் அணிந்தாய் போற்றி

கந்து முறிக்கும் களிற்றாய் போற்றி
இருவே றுருவுடை எந்தாய் போற்றி
மேருவில் பாரதம் விளம்பினாய் போற்றி
பிள்ளையார் என்னும் பெயராய் போற்றி
கணபதி என்வினை களைவாய் போற்றி

மாங்கனி அரன்பால் வாங்கினாய் போற்றி
அனலா சூரனை அழித்தாய் போற்றி
இராச கணபதி எந்தாய் போற்றி
அறுகு வன்னி அணிந்தாய் போற்றி
கமலா சுரனைக் காய்ந்தாய் போற்றி

என்னுருண் டைவடை ஏற்பாய் போற்றி
மும்மத வேழ முகத்தாய் போற்றி
மெய்ப்பொருள் வேழ மேனியாய் போற்றி
இருகுட் டேற்கும் எந்தாய் போற்றி
மனத்தின் இருளை மடிப்பாய் போற்றி

முந்திய பொருட்கெலாம் முந்தியோய் போற்றி
ஓமெனும் பொருளிலே உற்றோய் போற்றி
செல்வ விநாயக போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுமுதற் கடவுள்
## சிவபெருமான்
## போற்றித் திருத்தாண்டகம்
### [108 போற்றி]

திருச்சிற்றம்பலம்

கற்றவர்க ளுண்ணும் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுத மானாய் போற்றி
அல்லலறுத் தடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானே போற்றி போற்றி
வங்கமலி கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மதயானை யீருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித்தோ லாடைக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கள்தம் இறைவா போற்றி
ஆலமர நீழலறஞ் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்நெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமேல் ஒற்றைக்கண் ணுடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவே லேந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலும் ஆனாய் போற்றி
சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதப் படையுடையாய் போற்றி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னியசீர் மறைநான்கு மானாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக் கொருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளில் ஆடல் உகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்புமவர்க் கரும்பொருளே போற்றி போற்றி
நால்வேதம் ஆறங்க மானாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
உள்ளமா யுள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள்துணித்த மைந்தா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளேயே றேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்குந் தேவே போற்றி
திருமாலுக் காழி அளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெறஞ் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி
பிரமன்றன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றி
அன்றரக்கன் ஐந்நான்கு தோளுந் தாளும்
சிரம்நெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

---

### சிவத்தின் எல்லை

சொல்லும் இடமன்று சொல்லப்புகு மிடம்
எல்லை சிவனுக்கென் றுந்தீபற
என்றால்நா மென்சொல்கோ முந்தீபற

—திருவியலூர் உய்யவந்த தேவநாயனுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவசக்தி அர்ச்சனை

## காப்பு

அகர வற்புத வாதி பராபரி
பகரு முத்தமிழ்ப் பங்கய சுந்தரி
வகர தத்துவ மங்கள நாயகி
சிகர சிற்பர தேவியைப் போற்றுவாம்

## நூல்

அருள்வடி வாகிய அன்னையே போற்றி
பொருள்தரு கைலைப் புராதனி போற்றி
அன்பர்க் கிரங்கும் அமிர்தமே போற்றி
இன்பம் சுரக்கும் இறைவியே போற்றி
அருவுரு வாகிய அம்பிகை போற்றி
கருவுயி ராகிய காரணி போற்றி
அற்புத நாடக அணங்கே போற்றி
தற்பரா நந்தத் தாயே போற்றி
அகண்டா காசத் தடக்கமே போற்றி
திகழுமோங் காரத் திகம்பரி போற்றி
எண்ணெண் கலைகள் இசைத்தனை போற்றி
எண்ணெண் விளையாட் டியற்றினை போற்றி
நாலெட் டறங்கள் நாட்டினாய் போற்றி
கோலமுச் சங்கம் கூட்டினாய் போற்றி
நான்குபா தங்கள் நல்குவாய் போற்றி
தேன்தரு காவிற் செலுத்துவாய் போற்றி
ஆதியே நடுவே அந்தமே போற்றி
வேதநா தகலை விந்தே போற்றி
ஆயவைம் பூதத் தசைவே போற்றி
மாயை யறுக்கும் வரைமகள் போற்றி
ஆடலால் கபரம் அளித்தாய் போற்றி
கூடலால் முத்தி கொடுப்பாய் போற்றி
ஆகம மனைத்து மானாய் போற்றி
போகமும் யோகமும் பொழிவாய் போற்றி
ஆவணம் புதுக்கும் ஆத்தாள் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவர சங்கமத் தலைவியே போற்றி
பஞ்ச கிருத்திய பவானியே போற்றி
கஞ்சக தமர்ந்த கரும்பே போற்றி
வஞ்சனை நோய்க்கு மருந்தே போற்றி
மஞ்சுயர் மலைவளர் மனோஹரி போற்றி
தஞ்சமென் பாரின் தவத்துணை போற்றி
பஞ்சந் தீர்க்கும் பார்வதி போற்றி
நெஞ்சக மமர்ந்த நிரஞ்சனி போற்றி
செஞ்சிலம் பணிந்த சிவகாமி போற்றி
அஞ்சாப் பெருநிலை அருள்வாய் போற்றி
துஞ்சா வாழ்வில் தொடுப்பாய் போற்றி
காவலாய் நிற்கும் காயத்ரி போற்றி
சாவினை நீக்கும் சாவித்ரி போற்றி
கம்பையி னமர்ந்த காமாட்சி போற்றி
வெம்பிணி தீர்த்த மீனாட்சி போற்றி
விண்ணுயர் காசி விசாலாட்சி போற்றி
தண்ணருள் வைத்தியன் தையலே போற்றி
நமசிவ யப்பொருள் நாரணி போற்றி
சமயா தீதத் தனிமுதல் போற்றி
தலமெலாம் நிறைந்த சங்கரி போற்றி
பலமெலாம் படைத்த பகவதி போற்றி
கலசம் தாங்கிய கரத்தாய் போற்றி
சிலைமல ரேந்திய சியாமளி போற்றி
மயிலே கற்பக மணியே போற்றி
அயில்வேல் தந்த ஆரணி போற்றி
அம்புலி காட்டிய அபிராமி போற்றி
சும்பனை மாய்த்த சுதந்தரி போற்றி
மாளா மகிஷனை வதைத்தாய் போற்றி
வாளா லறநெறி வகுத்தாய் போற்றி
நாகம் புனைந்த நடேஸ்வரி போற்றி
வேகங் கெடுக்கும் வித்தகி போற்றி
ஐந்து கரத்தனை அருளினை போற்றி
கந்தனை யணைத்த கௌரியே போற்றி
சிந்தையி லாடும் சிவமே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தனை யறுக்கும் பைரவி போற்றி
பிரமனை நடத்தும் பிராட்டியே போற்றி
பரமனை யகலாப் பரையே போற்றி
மங்களக் குங்கும வடிவாய் போற்றி
சிங்க மிசைவரும் சிங்காரி போற்றி
எங்கும் நிறைந்த இரட்சகி போற்றி
பொங்கும் வளந்தரு பொன்மகள் போற்றி
வாங்கு வழங்கும் வாணியே போற்றி
ஊக்கம் பெருக்கும் உருத்திரி போற்றி
சென்மநோய் தீர்க்கும் சிவசக்தி போற்றி
தொன்மை கடந்த சோதியே போற்றி
மனமணி லிங்க மந்திரம் போற்றி
சினமுதற் குற்றம் தீர்ப்பாய் போற்றி
கும்பிடும் பணியிற் கூட்டுவாய் போற்றி
ஐம்புல வொடுக்கம் அருள்வாய் போற்றி
நிலைபெறு முலகெலாம் நிறைந்தாய் போற்றி
வலையறுத் தருட்கனி வழங்குவாய் போற்றி
சாந்த நிழல்தரும் தருவே போற்றி
தீந்தமிழ் மொழியாய்ச் செறிந்தாய் போற்றி
தவயோக மார்க்கம் சாற்றுவாய் போற்றி
அவிரோத ஞானம் ஆற்றுவாய் போற்றி
பேசும் பிரணவப் பிழம்பே போற்றி
பூசும் நீற்றின் பொலிவே போற்றி
தேச விளக்காய்ச் சிறந்தாய் போற்றி
வாச மலர்களாய் மலர்ந்தாய் போற்றி
எண்ணிய நலமெலாம் இசைப்பாய் போற்றி
பண்ணிய புண்ணியம் படைப்பாய் போற்றி
பரநலம் புரியப் பண்ணுவாய் போற்றி
குருநலம் காட்டும் கொண்டலே போற்றி
நானென தெனும்பிழை நலிவாய் போற்றி
தானுணர் அறிவில் தங்குவாய் போற்றி
ஆறு தாரத் தடக்கமே போற்றி
ஏறுக் கிரியில் ஏற்றுவாய் போற்றி
துன்பிருள் துரத்தும் சுடரே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது கோணிலை உடைப்பாய் போற்றி
காலனை உதைத்திடு காலியே போற்றி 95
மூலமாய் அமர்ந்த முதல்வியே போற்றி
கங்கையி லுதித்த கன்னியே போற்றி
கங்கையாம் மங்கையாய்க் கதித்தாய் போற்றி
ஆலங் காட்டினில் ஆடினாய் போற்றி
மாலின் தங்கையாய் வந்தாய் போற்றி 100
நினைத்த வடிவமாய் நிற்பாய் போற்றி
மனித்தப் பவவிதி வரைந்தாய் போற்றி
காண்பதுன் காட்சியாய்க் காட்டுவாய் போற்றி
பூண்பதுன் பணிஎனப் பூட்டுவாய் போற்றி
வல்லமை தரும்ஓம் மகாதுர்க்கை போற்றி 105
செல்வம் தரும்ஓம் திருமகள் போற்றி
கல்வியைத் தரும்ஓம் கலைமகள் போற்றி
நல்வரம் தரும்ஓம் நவசக்தி போற்றி 108

## தீபாராதனைத் துதி

போற்றிஓம் சக்தி போற்றி போற்றிஎன் றகத்தி லன்புச்
சாற்றினி லூறி நிற்குந் தண்ணடி யார்கள் தம்மைக்
கூற்றனின் நெடிய பாசக் கொடுமைக ளணுகா வீட்டி
லேற்றியங் கருட்பா லூட்டும் இறைவியே போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகப்பெருமான் வழிபாடு

## [108 போற்றி]

### திருச்சிற்றம்பலம்

அருவாம் உருவாம் முருகா போற்றி
திருவார் மறையின் செம்பொருள் போற்றி
ஆறு முகத்தெம் அரசே போற்றி
மாறுகொள் சூரரை வதைத்தாய் போற்றி
இருள்கொடுத் தின்பருள் எந்தாய் போற்றி
உருள்பூங் கடம்பணி உரவோய் போற்றி
ஈசற் கினிய சேயே போற்றி
மாசறு திருவடி மலரோய் போற்றி
உறுநர்த் தாங்கும் உரவோய் போற்றி
செறுநர்த் தேய்த்த செவ்வேள் போற்றி
ஊனில் ஆவியாய் உயிர்ப்போய் போற்றி
கானில் வள்ளியின் கணவ போற்றி
எழில்கொள் இன்ப வாரிதி போற்றி
அழிவிலாக் கந்தனாம் அண்ணல் போற்றி
ஏறு மயிலூர்ந் தேகுவாய் போற்றி
கூறுமன் பர்க்குக் குழைவாய் போற்றி
ஐயனாய் உலகை ஆக்குவாய் போற்றி
செய்யமே னியனே தேவே போற்றி
ஒருவனாய் உலகெலாம் ஒளிர்வாய் போற்றி
பருவம் முதிராப் பண்பே போற்றி
ஓவற இமைக்கும் ஒளியே போற்றி
மாமுதல் தடிந்த மறவ போற்றி
ஔவியம் அறுத்தோர்க் கருள்வோய் போற்றி
தெய்வமெல் லாந்தொழும் செய்யாய் போற்றி
அஃகுதல் இல்லா அறிவே போற்றி
வெஃகுதல் அற்றார் விளக்கே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தா மணமார் கடம்பா போற்றி
நந்தா விளக்கே நாயக போற்றி
காப்பாய் படைப்பாய் கழிப்பாய் போற்றி
மூப்பீ றற்ற முதல்வா போற்றி
கிள்ளை மொழியுமை பிள்ளாய் போற்றி
கள்ளப் புலனைக் களைவாய் போற்றி
கீழறும் அடியர் கிழவோய் போற்றி
ஏழுல குந்தொழும் இறைவா போற்றி
குன்றும் குழைதோட் குமரா போற்றி
என்றும் இளைய ஏறே போற்றி
கூம்புகைத் தேவர் கோவே போற்றி
பாம்பணி சிவனார் பாலக போற்றி
கெண்டைக் கண்ணியர் கேள்வ போற்றி
அண்டினர்க் கருளும் அங்கண போற்றி
கேடில் முருகனாய்க் கிளர்ந்தாய் போற்றி
வீடில் வீடருள் விமல போற்றி
கைவேல் கொண்ட காவல போற்றி
நைவேற் கருள்வாய் நாயக போற்றி
கொடைக்கடன் கொண்ட குழக போற்றி
படைக்கடல் தலைவ பரனே போற்றி
கோதில் அமிழ்தே குருமணி போற்றி
போதில் அமர்ந்த பொன்னே போற்றி
சிவபிரான் கண்வரு சேயே போற்றி
நவசர வணத்தில் நகர்ந்தாய் போற்றி
அறுவுரு அமைந்தே ஆடினாய் போற்றி
அறுமீன் பாலுண் அமர போற்றி
உருவுமை சேர்க்க உற்றாய் போற்றி
பெருமை பிறங்கு பெரியோய் போற்றி
நான்முக னைச்சிறை நாட்டினாய் போற்றி
மான்மகள் வள்ளியை மணந்தாய் போற்றி
செங்கண் கடாவைச் செலுத்தினாய் போற்றி
அங்கண் குறிஞ்சிக் கரசே போற்றி
இறைவனுக் கரும்பொருள் இசைத்தாய் போற்றி
மறையிடைப் பொருளாய் வளர்ந்தாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரங்குன் றமர்ந்த பரம்பர போற்றி
திருச்செந் தில்வளர் சேவக போற்றி
ஆவி னன்குடி ஆண்டாய் போற்றி
மேவிஏ ரகம்வாழ் மிக்கவ போற்றி
குன்றுதோ றாடும் குழந்தாய் போற்றி
துன்று பழமுதிர் சோலையாய் போற்றி
திசைமுகம் விளக்கும் செம்முக போற்றி
இசைபெரு வேள்வி இன்முக போற்றி
செங்களம் ஓர்க்கும் திருமுக போற்றி
மங்கல மான வானவ போற்றி
வள்ளிபால் நகைகொள் மாமுக போற்றி
திங்களின் ஒளிரும் சீர்முக போற்றி
ஆர்வலர் ஏத்த அருள்முக போற்றி
சீர்வளர் அழகின் செல்வா போற்றி
மணிமுடி புனையா றணிமுடி போற்றி
துணையடி தொழுவார்க் கணைவாய் போற்றி
செவியீ ராறுடைச் செம்மால் போற்றி
கவித்தொடை புனைதோட் கந்தா போற்றி
பன்னிரு கண்ணுடைப் பண்ணவ போற்றி
எண்ணிரு கண்ணின் இலகுவோய் போற்றி
பொருவில் ஒருவனும் புலவ போற்றி
அருண கிரிக்கருள் அமல போற்றி
நக்கீ ரற்கருள் நாதா போற்றி
தக்கசங் கத்தமிழ் தந்தாய் போற்றி
குமர குருபரற் கருளினை போற்றி
அமரர் அஞர்களை அளியோய் போற்றி
பந்தபா சங்களைப் பறிப்போய் போற்றி
கந்த புரிவாழ் வுகந்தோய் போற்றி
தெய்வானை யம்மையைச் சேர்ந்தோர்ய் போற்றி
பொய்யிலா மனத்துட் புகுவோய் போற்றி
கோழி வெல்கொடிக் கோவே போற்றி
ஊழிதோ றூழி உள்ளாய் போற்றி
செய்யாய் சிவந்த ஆடையாய் போற்றி
மெய்யெலாம் வெண்ணீ றணிவோய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95 மேலவர் மடங்கலாம் விசாக போற்றி
மூவர்கள் போற்றும் முத்த போற்றி
தேவர்கள் சிறைமீள் சீர்வலாய் போற்றி
சேவலும் மயிலும் சேர்த்தோய் போற்றி
போர்மிகு பொருந புரவல போற்றி
100 ஏர்மிகு இளஞ்சேய் எம்மிறை போற்றி
தாரகற் கொன்ற தாழ்விலாய் போற்றி
பாரகம் அடங்கலும் பரவுவோய் போற்றி
தமிழ்மொழி இன்பில் தழைப்பாய் போற்றி
அமிழ்திற் குழைத்த அழகா போற்றி
105 கல்வியும் செல்வமும் கனிந்தருள் போற்றி
பல்வகை வளனும் பணித்தருள் போற்றி
இன்பார் இளைய ஏந்தல் போற்றி
108 என்பால் அருள்புரி என்றும் போற்றியே

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ ராம ஜெயம்

# தமிழ் அருச்சனை மலர்

## திருமால்

ஓம்

**திரு. இராமாநுசர் திருவடிகளே சரணம்**

உலகினை அளந்த உத்தமா போற்றி
கருணை பொழியும் கண்ணா போற்றி
அரங்கத் துறையும் ஆரணா போற்றி
மானேர் விழியாள் மார்பா போற்றி
சகடம் உதைத்த சதுரா போற்றி

பாம்பணை கொண்ட பரமா போற்றி
ஆயர் குடிக்கோர் அன்பா போற்றி
மாயம் புரியும் மாதவா போற்றி
நற்றவர் வணங்கும் நாரணா போற்றி
ஆனிரை மேய்த்த அறவா போற்றி

வாசு தேவ வாமனா போற்றி
சிந்தனைக் கரிய செல்வா போற்றி
கச்சிப் பதிவாழ் கண்ணா போற்றி
பாற்கடல் கண்வளர் பரமா போற்றி
பதும நாபனே பண்பா போற்றி

பரசு ராமப் பனவா போற்றி
அனைத்தும் அறியும் அமரா போற்றி
இருடி கேசவ இறைவா போற்றி
பாண்டவர்க் கருளிய பரமா போற்றி
அரிகோ விந்தா அச்சுதா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானுற நிமிர்ந்த வண்ணா போற்றி
நாரணன் என்ற நாதா போற்றி
கேசியைக் கொன்ற கேசவா போற்றி
மாதவர் போற்றும் மாதவா போற்றி
ஆழி ஏந்திய அழகா போற்றி

விளவு எறிந்த வித்தகா போற்றி
கனியினும் இனிய கண்ணா போற்றி
குரங்குப் படையுடைக் குழகா போற்றி
கற்றோர் பரவும் காரணா போற்றி
எங்கணும் நிறைந்த இறைவா போற்றி

சீதா பிராட்டியின் தேவா போற்றி
நாண்மறை காத்த நற்றவா போற்றி
நாரதர்க் கருளிய நாதா போற்றி
வாலியை வதைத்த வரதா போற்றி
பூவ ராகா புனிதா போற்றி

வழுவிலா வாள்கொள் மாதவா போற்றி
வீரவில் ஏந்திய விமலா போற்றி
உருக்கு மணிமகிழ் உபேந்திரா போற்றி
கௌரவர் குடிக்குக் காலா போற்றி
இரகு குலத்து இராமா போற்றி

மழுப்படை தாங்கிய மாண்பா போற்றி
பரம பதம்அருள் பரமா பேற்றி
நிலமகள் தனக்கு நேயா போற்றி
மாலிருஞ் சோலை மாண்பா போற்றி
வேங்கட மாமலை விமலா போற்றி

நினைவை அறியும் நின்மலா போற்றி
பொங்குங் கீர்த்திப் பூரணா போற்றி
ஐம்படை தாங்கிய அழகா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலந்தரும் சொல்லுடை நாரணா போற்றி
விண்ணவர் போற்றும் வித்தகா போற்றி

கடலைக் கடைந்த கண்ணா போற்றி
முனிவர்க் கருளிய முகில்வண்ணா போற்றி
நாமம் பலவுடை நாயகா போற்றி
கருடக் கொடியுடை கண்ணா போற்றி
வானவர் போற்றும் மணியே போற்றி

அறிவினுக் கறிவாம் அரியே போற்றி
மதுசூ தனனே மணியே போற்றி
காரொளி வண்ணக் கடலே போற்றி
ஆனைக் கருளிய அண்ணலே போற்றி
தேவகி பெற்ற சிங்கமே போற்றி

அச்சுதா அமரர் அரசே போற்றி
ஆக்கம் அருளும் ஐயனே போற்றி
மண்ணுண் டுமிழ்ந்த மாயனே போற்றி
பூமகள் போற்றும் புனிதனே போற்றி
ஆதிமூ லப்பொருள் ஆனாய் போற்றி

ஊனாய் உயிராய் உற்றாய் போற்றி
ஒப்பில் தாமரை உந்தியாய் போற்றி
தூணில் தோன்றிய தூயாய் போற்றி
ஆமை வடிவாய் அமைந்தாய் போற்றி
அசுரர் பலரை அழித்தாய் போற்றி

முந்தை வினையினை முறிப்பாய் போற்றி
அந்தமில் பரபதம் அளிப்பாய் போற்றி
நற்றமிழ்ப் பற்றினால் நடந்தாய் போற்றி
திருவலிக் கேணியில் திகழ்ந்தாய் போற்றி
குறளாய் நிலத்தைக் கொண்டாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்த பாசம் பறிப்பாய் போற்றி
கொடிய வல்வினை தீர்ப்பாய் போற்றி
மலையால் மழையினைத் மறித்தாய் போற்றி
அரசனாய் அயோத்தி ஆண்டாய் போற்றி
எப்பொருள் தனையும் ஈவாய் போற்றி

தஞ்சமென் றவரைத் தாங்கினாய் போற்றி
நிலங்கீழ் வராகமாய் நின்றாய் போற்றி
சிசுபா லன்தனைத் செற்றாய் போற்றி
மாலையில் வெயிலை மறைத்தாய் போற்றி
இலங்கைக் கிறையை இறுத்தாய் போற்றி

ஆனில் ஐந்தும் ஆனாய் போற்றி
தாடகை மடியத் தாக்கினாய் போற்றி
ஆமை வடிவாய்த் அமைந்தாய் போற்றி
கஞ்சன் வஞ்சனை கடந்தாய் போற்றி
சிலையினைப் பெண்ணாய் செய்தாய் போற்றி

வாணா சுரனை வதைத்தாய் போற்றி
ஊனமில் சக்கரம் உடையாய் போற்றி
மாவலி மாண்பை மாய்த்தாய் போற்றி
அருளே உருவாய் அமைந்தாய் போற்றி
ஏதமில் தண்டினை ஏந்தினாய் போற்றி

அர்ச்சை வடிவாய் அமர்ந்தாய் போற்றி
ஆண்டாள் மாலையினை அணிந்தாய் போற்றி
பூதகி வஞ்சம் போக்கினாய் போற்றி
மல்லர் பலரை மாய்த்தாய் போற்றி
நீரில் மீனாய் நீந்தினாய் போற்றி

குவலயா பீடம் கொன்றாய் போற்றி
நலமெலாம் உயிர்க்கு நல்குவாய் போற்றி
காளியின் கர்வம் கடிந்தாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத மரத்தினை மாய்த்தாய் போற்றி
தாமரை புரையும் தாளாய் போற்றி
தீரா வினைகள் தீர்ப்பாய் போற்றி
உள்ளுணர் கீதையை உரைத்தாய் போற்றி
பூமகள் கணவா போற்றி போற்றி.

**திரு. இராமாநுசர் திருவடிகளே சரணம்**

## நவக்ரஹ த்யானம்

அர்க ஸோம் குஜம் ஸௌம்ய
குரு ஶுக்ர ஶனைஸ்சர: |
ராஹு கேது க்ரஹம் தேவம்
வந்தனம் பாதபங்கஜம் ||

## ஸ்ரீ நவக்ரஹ அஷ்டோத்தரம்

ஓம் பானவே நம:
,, ஹம்ஸாய நம
,, பாஸ்கராய நம:
,, ஸூர்யாய நம:
,, ஸூராய நம:

,, தமோதாய நம:
,, ரதயே நம:
,, விஸ்வத்ருதே நம:
,, அவ்யாப்தே நம:
,, ஹரயே நம ||

ஓம் வேதமயாய நம:
,, விபவே நம:
,, ஸுத்தாம்ஸவே நம:
,, ஸுப்ராம்ஸவே நம:
,, சந்த்ராய நம: 15

,, அத்ரநேத்ரஸமுத்பவாய நம:
,, தாராதிபாய நம:
,, ரோஹிணீஸாய நம:
,, ஸம்புமூர்த்தி க்ருதலயாய நம:
,, ஓஷதீப்யோ நம: || 20

,, ஓஜோபதயே நம:
,, ஈஸ்வரத்ராய நம:
,, ஸுதாநிதயே நம:
,, ஸகலாஹ்லாதனகராய நம:
,, பௌமாய நம: 25

,, பூமிஸுதாய நம:
,, பூதமர்யாய நம:
,, ஸமுத்தவாய நம:
,, ஆர்தாய நம:
,, அக்னிக்ருதே நம: || 30

,, ரோஹிதாங்காய நம:
,, ரக்தவஸ்த்ரதராய நம:
,, ஸுபயே நம:
,, மங்களாய நம:
,, அங்காரகாய நம: 35

,, ரக்தமாலினே நம:
,, மாயவிஸாரதாய நம:
,, புதாய நம:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் தாரஸுதாய நம:
,, ஸௌம்யாய நம: 40

,, ரோஹிணீகர்ப்பஸம்பூதாய நம:
,, சந்த்ராத்மஜாய நம:
,, ஸோமவம்ஸகராய நம:
,, ஸ்ருதிவிஸாரதாய நம:
,, ஸத்யஸந்தாய நம: 45

,, ஸச்யவிந்தவே நம:
,, விதுஹுதே நம:
,, விபுஜாய நம:
,, விபவே நம:
,, வாக்ருதே நம: || 50

,, ப்ராஹ்மணாய நம:
,, ப்ரஹ்மணே நம:
,, திஷ்ணாய நம:
,, ஸுபவேஷதராய நம:
,, க்ரீஷ்மவே நம: || 55

,, குரவே நம:
,, இந்த்ரபுரோஹிதாய நம:
,, ஜீவாய நம:
,, நிர்ஜரபூஜிதாய நம:
,, பீதாம்பராலங்க்ருதாய நம: || 60

,, ப்ருகவே நம:
,, பார்கவ ஸம்பூதாய நம:
,, திஸாசரகுரவே நம:
,, கரயே நம:
,, ப்ருத்யக்யாத்வஜாய நம: || 65

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ப்ருகுஸுதாய நம:
,, வர்ஷக்ருதவே நம:
,, தீனராச்யுதாய நம:
,, ஸுக்ராய நம:
ஸுக்ரஸ்வரூபாய நம: || 70

,, ராஜ்யதாய நம:
,, லயக்ருதாய நம:
,, கோணாய நம:
,, ஸனைஸ்வராய நம:
,, மந்தாய நம: || 75

,, சாயாஹ்ருதயநந்தாய நம:
,, மார்தாண்டாய நம:
,, பங்கவே நம:
,, ஸூர்யதநூபவாய நம:
,, யமாநுஜாய நம: || 80

,, அதிபயக்ருதே நம:
,, நிலாய நம:
,, ஸூர்யவம்ஸஜாய நம:
,, நிர்மாணதேஹாய நம:
,, ராஹவே நம: || 85

,, ஸ்வர்பானவே நம:
,, ஆதித்யசந்த்ர த்வேஷிண்யே நம:
,, புஜங்கமாய நம:
,, ஸிம்ஹிதேஸாய நம:
,, தகுனே நம: 90

,, ராத்ரிபதிபீடிதாய நம:
,, அஹராஜே நம:
,, ஸிரோஹீனாய நம:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

,, விஷதராய நம:
,, மஹாகாய நம: 95

,, மஹாபூகாய நம:
,, ப்ராஹ்மண்யாய நம:
,, ப்ரஹ்மஸம்பூதாய நம:
,, ரவிக்ருதே நம:
,, ராஹுரூபதுதே நம: ॥ 100

,, கேதவே நம:
,, கேதுஸ்வரூபாய நம:
,, கேசராய நம:
,, கக்ருதாலயாய நம:
,, ப்ரஹ்மவிதே நம: ॥ 105

,, ப்ரஹ்மபுத்ராய நம:
,, குமாரகாய நம:
,, ப்ராஹ்மணபீதாய நம 108
,, நானாவித பரிமள பத்ர புஷ்பாணி
,, ஸமர்பயாமி.

## நவக்கிரக புகழ்ப்பாக்கள்

### சூரியன்

காசினி யிருளை நீக்குங் கதிரொளி யாகி யெங்கும்
பூசனை யுலகோர் போற்றப் புசிப்பொடு சுகத்தை நல்கும்
வாசி யேழுடைய தேர்மேன் மகாகிரி வலமாய் வந்த
தேசிகா வெனை ரட்சிப்பாய் செங்கதி ரவனே போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திரன்

அலைகடலதனி லின்று மன்றுவந் துதித்தபோது
கலைவளர் திங்களாகிக் கடவுள ரெவருமேத்துஞ்
சிலைமுத லுமையாள் பங்கன் செஞ்சடைப் பிறையாய் மேரு
மலைவலமாக வந்த மதியமே போற்றி போற்றி.

## செவ்வாய்

வசனநற் றைரியத்தோடு மன்னவர் சபையில் வார்த்தை
புசபல பராக்கிரமங்கள் போர்தனில் வெற்றியாண்மை
நிசமுடனவர்க்கு நீணிலந்தனி லளிக்குங்
குசனில மகனுஞ் செவ்வாய் குறைகழல் போற்றி போற்றி.

## புதன்

மதனநூல் முதலா நான்கு மறைபுகல் கல்விஞானம்
விதமுட னவரவர்க்கு விஞ்சைக ளருள் வோன்றிங்கள்
சுதன்பவுசு பாரில் சுகம்பல கொடுக்க வல்லன்
புதன்கவி புலவன் சீமான் பொன்னடி போற்றி போற்றி.

## குரு

மறைமிகு கலைநூல் வல்லோன் வானவர் பிரசன் மந்தி
நறைசொரி கற்பகப் பொன்னாட்டி னுக்கதிப னாகி
நிறைதனஞ் சிவிகை மண்ணி னீடுபோ கத்தை நல்கு
மிறையவன் குரு வியாழ னிருமலர்ப் பாதம் போற்றி

## சுக்கிரன்

மூர்க்கவான்சூரன் வாரணன் முதலினோர் குருவாய் வையங்
காக்கவான் மழைபெய் விக்குங் கவிமகன் கனக மீவோன்
றீர்க்க வானவர்கள் போற்றச் செத்தார் தமையெ ழுப்பும்
பார்க்கவன் சுக்ராசாரி பாதபங் கயமே போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனி

முனிவர்க டேவரேழு மூர்த்திகள் முதலினோர்கள்
மனிதர்கள் சகலவாழ்வின் மகிமைய தல்லாலுண்டோ
கனிவுள தெய்வம் நீயே கதிர்சேயே காகமேறுஞ்
சனியனே யுனைதுதிப்பேன் றமியனேற் கருள்செய் வாயே.

## இராகு

மாகுவோர் நெடுமான் முன்னம் வானவர்க் கமுதமீயப்
போகுமக் காலையுன் றன் புணர்ப்பினுற் சிறமேயுற்றுப்
பாகுசேர் மொழியாள் பங்கன் பரன்கையி லீண்டப் பெற்ற
ராகுவே யுனைதுதிப்பேன் ரட்சியும் ரட்சிப் பாயே.

## கேது

பொன்னையெ னுளத்திற் கொண்டேன் புலவர்தம்
பொருட்டா லாழி
தன்னையே கடைந்து முன்னந் தண்ணமு தளிக்க லுற்ற
பின்னை நின் கரவா னுண்ட பெட்பினிற் சிரம்பெற் றுய்ந்தா
யென்னையாள் கேதுவேயிவ் விருநிலம் போற்றத்தானே.

## பொது

சூரியன் சோமன் செவ்வாய் சொற்புதன் வியாழன் வெள்ளி
காரிமி ராகுகேது கடவுள ரொன்பானுமத்
தாரியல் சக்கரத்தைத் தரித்திரர் பூசித்தாலும்
பாரினிற் புத்திர ருண்டாம் பாக்கியம் நல்குந்தானே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை

1. உம்மை மறக்கச் செய்யும் எந்த ஒரு பொருளும் என்னை அணுகா தொழிக.

2. உமது திருவருளை நினைவூட்டும் ஓர் அற்பப் பொருளையும் யான் போற்றி மகிழ்வேனாக

3. காமமாதி கொடும் பேய்களெல்லாம் எ உள்ளத்தைக் கொள்ளை கொள்ளா வண் நீர் காத்தருள்வீராக.

4. கருணையாம் உமது அருள் வெள்ளத்தில் யான் அமிழ்ந்து மூழ்குவேனாக.

5. செய்யும் செயல்களுக்கு யான் அதிகாரி இல்லை என்று உணர்த்துவீராக.

6. நன்மையும் தீமையும் நாயகன் அருள் என்று நாடுவேனாக.

7. புன்மை தரு புவனப் பொருள்களை யெல்லாம் விரும்பாது ஒழிவேனாக.

8. எத்தகைய ராயினும் உமது அடியாரை நீர் என எண்ணிப் போற்றுவேனாக.

9. என் உடல் பொருள் ஆவி அனைத்தையும் உமக்கே அர்ப்பணம் செய்தேன்.

10. ஏன்றெனைக் காப்பீர்! காப்பீர்! காப்பீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org